**புகழ்ச்சிக் கூட்டநற்செய்தி**

2019 தை மாதம் 21ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை

***‘இறையரசின் சாட்சியாகிட தூயஆவியானவரின் திருமுழுக்கு’***

01. ஆரம்பப் புகழ்ச்சி
புபுது பாடல் இல 10 “தூய ஆவியானவரே வந்தருள்வீர்………”

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்
**“நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுள் அனுப்பியுள்ளார், அந்த ஆவி ‘அப்பா தந்தையே’ எனக் கூப்பிடுகிறது.”** (கலாத்தியர் 4:6)
இயேசுக்கிறிஸ்து நாதரை வாழ்வின் ஆண்டவராக ஏற்றுக் கொண்டு பயணம் செய்யும் எங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதானது யாருக்கும் ஒப்பிட முடியாத உன்னதமான அழைப்பாகும். கடவுளை ‘அப்பா’என்று அழைத்திடக் கிடைப்பது இறை புத்திரத்தன்மையை பெற்றதற்கான சான்றாகும். அவ்வாறான உரிமையை எமக்கு பரிசளிக்க மகோன்னத இறைவனை நாம் புகழ்ந்திடுவோம்.
புபுது பாடல் இல 150 ‘இறைவன் இல்லாத பூவுலகம்….’

03. மீளப்பார்த்தல்
கடந்தவார அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வோம்.

04. நாளுக்குரிய நற்செய்தி :- புனித மாற்கு 1:15ஐ பொதுவில் வாசிக்கவும்
நாம் செவிமடுத்த பரிசுத்த வேதாகமப் பகுதியில் இறை அரசு எனும் வார்த்தைக்கு எமது அவதானத்தை செலுத்தகையில் இறைஅரசு என்பது இறைவனின் ஆளுமை, விருப்பம் நிறைவேறுவதாகும். இன்னுமொறு விதத்தில் முழு உலகமும், மனிதகுலமும் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்திட ஆண்டவர் பயன்படுத்திய வார்த்தையாகவும் அறிமுகப்படுத்த முடியும் என்பதை நாம் கற்றுள்ளோம். தன் வாழ்வின் ஒரே நோக்கம், எதிர்பார்ப்பு இறை அரசினை கட்டியெழுப்புவதாக்கிக் கொண்ட இயேசு ஆண்டவர் அனைத்திற்கும் முன்னர் அப்பா தந்தையின் முன்னிலையில் செபத்தில் தோன்றி நின்றார்.

- அப்பாவின் குரலுக்கு செவிமடுத்தல்
- வார்த்தைக்கு உளந்திறத்தல்
- வார்த்தையை ஏற்றுக்கொள்ளல்
- விருப்பத்தை கேட்டல்

இறை தந்தையிடமே தங்கியவாறு அவர் கற்றுக் கொண்டார். தனது விருப்பத்தினின்று, ஆசையினின்று வெறுமையாகிய இயேசு ஆண்டவர் தனது எண்ணம், கருத்து இறைஅரசினை கட்டியெழுப்பிட தடையாகும் என்பதை எமக்குக் கற்றுத் தந்தார்.

05. எம்மை நோக்கி
- கிறிஸ்துவின் வழி நடப்பவர்களாகிய நாம் அவர் பக்கம் பார்வையை செலுத்திட வேண்டும்.
- இறைஅரசினைக் கட்டியெழுப்பிட அழைப்பினை பெற்றுள்ள நாம் நிரந்தரமும் இறைவனின் குரலுக்கு செவிகொடுத்திட வேண்டும். இறைவார்த்தைக்கு உளந்திறந்தட வேண்டும். இறைஉள்ளத்தை அறிந்திட இறைவன் முன்னிலையில் செபத்தில் தோன்றிநிற்க வேண்டும்.
- எமது விருப்பத்தினின்று, கருத்தினின்று, செயல்பாடுகளினின்று, எண்ணங்களினின்று நாம் வெறுமையாகிட வேண்டும்.

06. கலந்துரையாடலுக்காக

தூயஆவியானவரின் திருமுழுக்கு திருவிழாவோடு இறைஅரசிற்காக வாழ்ந்திட நாம் தூயஆவியின் திருமுழுக்கினைப் பெற்றுள்ளோம்.

i. எமக்கு எம்மை கண்டிட கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்தில் பயன் பெற்றிட முடிந்ததா? உதாரணம்:- நாம் ஒவ்வொருவரும் கட்டுப்பட்டிருக்கும் எண்ணக் கருத்துக்களை இனங்காண முடிந்ததா?

ii. இறைஅரசினைக் கட்டியெழுப்பிடத் தேவையான முதன்மையான இலட்சணங்கள் மத்தியில் உளந்திறத்தல், வார்த்தையைத் தேடல், வார்த்தைக்கு கீழ்படிதல் என்பன எவ்வளவு நடைமுறையாகியது?

07. இறுதிப் புகழ்ச்சி

வார்த்தைக்கு செவிமடுத்த, வார்த்தைக்கு முழுமையாக உளந்திறந்த, வார்த்தைக்குள் வாழ்ந்தவாறு சாட்சி பகர்ந்த இறைஅன்னையின் பரிந்துரைத்தலைக் கேட்டு ‘‘அருள்நிறை மரியே’’ செபத்தினை மும்முறை உச்சரிப்போம்.